**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை**
**இ.ம.எண்.05/2019**
**இ.ம.எண்.04/2019**
**அ.வ.எண்.03/2019**

1. அங்கப்பன்
2. அருள்மொழி
3. தேன்மொழி
4. கார்த்திகேயன்
5. இளையராஜா
6. ஜோதி
7. ஆறுமுகம் ...மனுதாரர்கள்/மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள்

/எதிராக/

1. குமார்
2. பிரித்தா
3. தங்கராஜி ...எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/1 ம்பிரதிவாதி

இம்மனு கடந்த 17.12.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 1,2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் இ.ம.எண்.04/2019 என்ற மனுவில் மனுதாரர் தரப்பு வாதுரைக்காக மனுவை மீண்டும் திறக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : -

தாவாவை எதிர்மனுதாரர்கள் நிரந்தர தடை உத்தரவு கோரி மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.4/19 ல் 3 ம்எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக மேற்படி மனு வாய்தா போடப்பட்டுள்ளது. இதனிடையில் மனுசொத்து சம்மந்தப்பட்ட சில ஆவணங்கள் மனுதாரர்களுக்கு தற்சமயம் கிடைக்க பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் அவற்றை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்து மனுதாரர்கள் தரப்பில் மேலும் வாதுரை செய்ய வேண்டியுள்ளதால் எதிர்மனுதாரர் தரப்பை மீண்டும் திறக்க உத்தரவு செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்கிறார். எனவே இ.ம.எண்.04/2019 என்ற மனுவில் மனுதாரர் தரப்பு வாதுரைக்காக மனுவை மீண்டும் திறக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டு அவர்களுடைய ஆவணங்கள் முழுமையும் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் இடைக்கால தடையுத்தரவு கோரி எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவில் உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் அடுத்தடுத்து தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தையும் வீணடித்தும், வழக்கை காலதாமதப்படுத்தியும், எதிர்மனுதாரர்களை அலைக்கழிப்பு செய்தும் வருகின்றனர். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1,2 ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவாவை எதிர்மனுதாரர்கள் நிரந்தர தடை உத்தரவு கோரி மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் எனவும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.4/19ல் 3ம்எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக மேற்படி மனு வாய்தா போடப்பட்டுள்ளது எனவும், இதனிடையில் மனுசொத்து சம்மந்தப்பட்ட சில ஆவணங்கள் மனுதாரர்களுக்கு தற்சமயம் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அதன் அடிப்படையில் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்து மனுதாரர்கள்

தரப்பில் மேலும் வாதுரை செய்ய வேண்டியுள்ளதால் எதிர்மனுதாரர் தரப்பை மீண்டும் திறக்க உத்தரவு செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்கிறார் எனவும், எனவே இ.ம.எண்.04/2019 என்ற மனுவில் மனுதாரர் தரப்பு வாதுரைக்காக மனுவை மீண்டும் திறக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1,2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டு அவர்களுடைய ஆவணங்கள் முழுமையும் குறியீடு செய்யப்பட்டது எனவும், மேற்படி வழக்கில் இடைக்கால தடையுத்தரவு கோரி எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவில் உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் அடுத்தடுத்து தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தையும் வீணடித்தும், வழக்கை காலதாமதப்படுத்தியும், எதிர்மனுதாரர்களை அலைக்கழிப்பு செய்தும் வருகின்றனர் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1,2 ம் எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. 3 ம் எதிர்மனுதாரர் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளார்.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இ.ம.எண்.4/2019 இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் விசாரணை நீதிமன்றத்தில் தான் ஆவணங்களை தாக்கல் செய்து அதுகுறித்து வாதுரைக்க இருதரப்பினருக்கும் உரிய வாய்ப்பு வழங்க முடியும் என்பதாலும், மனுதாரர்கள் தங்களுடைய மனுவை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது என்பதாலும், இ.ம.எண்.4/2019 யை திறக்க கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் 1,2 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் 1,2 ம் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.750/-செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் 1,2 ம்எதிர்மனுதாரர்களுக்கு ரூ.750/-யை செலவுத் தொகையாக 09.01.2020 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 10.01.2020.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**